[65-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

இணைப்பு-4.

அரிசன நலத்துறை மானியம்.

கொள்கை விளக்கக் குறிப்பு.
(1971–72).

"அரிசன, மலைவாசி மக்கள் நலன்" என்பதன்கீழ் இந்த 1971–72-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை இப்பேரவையின் முன்வைத்து ரூபாய் 700.422 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலைக் கோருகிறேன்.

அரிசன, மலைவாசி மக்கள் நலன்களைப் பேணுவதற்காகத் தமிழ் நாடு அரசு ஆற்றும் ஆக்கப் பணிகள், முயற்சிகள் பற்றிய விவரங் களைக் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம் :—

1. கல்வி.
2. பொருளாதாரம்.
3. குடியிருப்பும் மற்ற பொது வசதிகளும்.
4. துப்புரவுப் பணிபுரியும் மக்களின் நலன்.
5. தீண்டாமை ஒழிப்பு.
6. மலைவாசி மக்களின் வளர்ச்சி.

1. கல்வி.

ஒவ்வோர் ஆண்டும் அரிசன நலத்துறைக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும் பகுதி கல்விக்காகச் செலவிடப்படுகிறது. 1969–70-ம் ஆண்டில் அரிசன நலத் துறைக்காகச் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 540.80 லட்சத்தில் அரிசனங்களின் கல்விக்கு மட்டும் ரூ. 397.55 லட்சம் செலவிடப்பட்டது. இது மொத்தத் தொகையில் 74 விழுக்காடு ஆகும். 1970–71-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 551.13 லட்சமாகும். இதில் கல்விக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 415.47 லட்சமாகும். இது திருத்திய மதிப்பீட்டில் ரூ. 433.32 லட்சமாக உயர்ந்துள்ளது. இது மொத்தத் தொகையில் 75 விழுக்காடு ஆகும். 1971–72-ஆம் ஆண்டில் ஒதுக்கப் பட்ட மொத்தத் தொகையான ரூ. 700.42 லட்சத்தில் கல்விக்கு மட்டும் ரூ. 527.59 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

படிப்பு உதவித் தொகை

அரிசன, மலைவாசி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவ மாணவியர்களுக்கு உண்டுறை உதவித் தொகைகளும், படிப்பு உதவித் தொகைகளும், தொடரா மானயங்களும் தொடக்க வகுப்புகளிலிருந்து பட்ட மேற்படி வரையிலும் கலைப் படிப்பிற்கும் தொழில் படிப்பிற்கும் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன. 1969-70, 1970 71-ஆம் ஆண்டுகளில் இதற்காக வழங்கப்பட்ட தொகையும் இதனால் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

மத்திய அரசு படிப்பு உதவித் தொகை (Government of India Scholarships)

ஆண்டு.	அரிசன மாணவ மாணவியர்கள்.				மலைவாசி மாணவ மாணவியர்கள்.			
	பள்ளி இறுதி வகுப்பு வரை. Pre-Matric.		மேல் படிப்பு. Post-Matric.		பள்ளி இறுதி வகுப்பு வரை. Pre-Matric.		மேல் படிப்பு. Post-Matric.	
	வழங்கப்பட்ட தொகை.	பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட தொகை.	பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட தொகை.	பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட தொகை.	பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	ரூ.		ரூ.		ரூ.		ரூ.	
1969–70	..	..	57,42,795	11,527	..	..	70,137	117
1970–71	..	..	63,03,499	13,138	..	..	79,689	158
			தமிழக அரசு படிப்பு உதவித் தொகை (State Scholarships)					
1969–70	64,26.232	3,52,155	18,28 854	7 640	14,:54	744	..	
1970–71	67,68 845	3,86,843	20,32,870	8,136	13 292	1,004	..	..

குறிப்பு.—மலைவாசி மாணவ மாணவியர்களுக்கு மேற்படிப்புக்காக உதவித் தொகை மத்திய அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது.

இதிலிருந்து கல்விக்கு மானியமாக வழங்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட மாணவ மாணவிகளின் எண்ணிக்கையும் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவது நன்கு விளங்கும்.